தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043–புரட்டாசி 24

2012 அக்டோபர் 10, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் **முனைவர் செ.கு. தமிழரசன்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:

"இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு"

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி, தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்குப் புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. பேரவைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்: *ஒரு எளிய குடும்பத்தைச் சார்ந்த, எளிய இயக்கத்தைச் சார்ந்த, எளிய சமூகத்தைச் சார்ந்த, எளியவனான என்னை இரண்டாவது முறையாக தற்காலிகப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்க வைத்திருக்கிற, அந்த வாய்ப்பை உருவாக்கிய போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றிகளைப் பதிவு செய்கிறேன்.*

பேரவையின் இன்றைய அலுவல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 178–வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவரைத் தேர்ந்தெடுக்க நடைபெறும் தேர்தல் ஆகும். பேரவைத் தலைவர்

[தற்காலிகப் பேரவைத் தலைவர்] [2012 அக்டோபர் 10

தேர்தலுக்காக, 9–10–2012 ஆம் நாள் நண்பகல் 12–00 மணி வரை ஒரு வேட்புத்தாள் மட்டுமே பேரவைச் செயலாளரால் பெறப்பட்டிருக்கிறது.

சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4–ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு முறைப்படி நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. ப. தனபால் அவர்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி)

முன்மொழிந்தவர் : மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பேரவை முன்னவர் அவர்கள்.

வழிமொழிந்தவர் : மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. ப. தனபால் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, வேட்புத்தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. ப. தனபால் அவர்கள், இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்துடன் எனது அலுவல் முடிவடைந்தது.

இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களுக்கு உளமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவின் இரும்பு மங்கையாக, எதிர்கால இந்தியாவை நிர்மாணிக்கப் போகிற (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்றப் பேரவை

2012 அக்டோபர் 10] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

வைர விழா கண்டு கொண்டிருக்கிற இந்தத் தருணத்தில், ஒடுக்கப்பட்ட மக்களின் உள்ளங்களில் எல்லாம் என்றென்றைக்கும் விலை மதிக்க முடியாத வைரமாகத் திகழ்கிற வகையிலே *(மேசையைத் தட்டும் ஒலி)* அம்மா அவர்கள் இந்தச் சமூகத்தின் கடைக்கோடியிலே இருக்கிற, கடைக்கோடி சமூகத்திலே இருந்து வந்திருக்கிற திரு. ப. தனபால் அவர்களை இந்தப் பேரவையின் உயர் பதவியான தலைவர் பதவிக்கு நியமித்து தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பளித்திருக்கிறார் என்கிறபோது ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் எங்கள் உளப்பூர்வமான நன்றிகளை இந்தச் சந்தர்ப்பத்திலே உரித்தாக்கிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்த இருக்கையிலிருந்து நான் அதிகம் பேச முடியாது என்பதனால் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். கௌதம புத்தரைப் பார்த்து அவருடைய சீடர்கள் கேட்டார்கள், “உலகத்திலேயே உயரமானது எது” என்று. புத்தர் சிரித்துக் கொண்டே சொன்னார், “பள்ளத்திலே இருக்கிறவனைக் கைதூக்கி விடுவதற்குக் குனிபவன் இருக்கிறானே, அவன்தான் உலகத்திலேயே உயரமானவன்” என்று. *(மேசையைத் தட்டும் ஒலி)* பள்ளத்திலே இருக்கிற ஒரு சமூகத்தை, 60 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, இன்றைக்குத் தமிழகத்தின் சட்டமன்றப் பேரவைத் தலைவர் பதவிக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாறு இருக்கிறவரை, தமிழகத்தின் சட்டமன்ற வரலாறு இருக்கிறவரை, மிக உயரமானவர் என்கிற அந்த உச்சகட்டத்தை இன்றைக்குப் பெற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–05

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பேரவைத் தலைவரை, பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்து வந்து, பேரவைத் தலைவரது இருக்கையில் அமரச் செய்வது மரபாகும். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், தேசிய முற்போக்கு திராவிட கழக சட்டமன்றக் கட்சியின் துணைத் தலைவர் அவர்களும் அழைத்து வந்து, பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களது இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ச. இராமச்சந்திரன் அவர்களும், அழைத்து வந்து பேரவைத் தலைவரின் இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என, பார் புகழும் இலட்சியத்தை அறிவித்த தாயே! பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வாழும் தாயே!

மணமிக்க வாச மலரை யார் தடுத்து மறைத்தாலும் மணம் வீச மறுப்பதில்லை! ஆம், அம்மாவின் புகழை, யார் தடுத்து மறைத்தாலும், மறைக்க முடியாது, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மறைக்கவே முடியாது.

இணக்கமும், இனிமையும் இதயத்தில் ஏந்தியோர் எதிரியால் தோற்பதில்லை! ஆம், எங்கள் அன்னைக்கு என்றைக்கும் வெற்றிதான். (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி மேல் வெற்றிதான். எந்நாளும் நம் அன்னைக்கு வெற்றி முகந்தான். வணக்கத்தை உரைக்கத்தான் துடிக்கிறேன். அன்னையே, வார்த்தைகள் வரவேயில்லை!

அரியணை ஏற்றதும் ஏற்றமிகு திட்டங்களைத் தந்த தாயே! அனைவரும் போற்றிடும் சட்டங்களால் வியக்க வைத்த தாயே! அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற தாயே! உங்களை வணங்குகின்றேன் தாயே!

கதறிய ஈழத் தமிழர்க்கு கரம் கொடுத்த தாயே! சிதறிய தமிழினத்தை ஒன்று சேர்த்த தாயே! உலகத் தமிழர்களின் உள்ளங்களில் என்றென்றும் உளப்பூர்வமான நடவடிக்கைகளினால் உயர்வாக வாழும் தாயே! உங்களை வணங்குகின்றேன் தாயே!

2012 அக்டோபர் 10] [பேரவைத் தலைவர்]

உங்கள் பாதையில் எத்தனையோ புயல்கள், "தானே" புயலையே, தள்ளாட வைத்தவர் அல்லவா நீங்கள்? (மேசையைத் தட்டும் ஒலி)

உங்கள் பயணத்தில் எத்தனையோ தடைகள், தடைகளையே படிக் கற்களாக்கியவர் அல்லவா நீங்கள்? ஓராண்டு ஆட்சியில், நூறாண்டு சாதனை படைத்து சரித்திரத்தைப் பதிவு செய்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் விடியலுக்காக உழைத்து தொலைநோக்குத் திட்டங்கள் தந்த தாயே! உங்களை வணங்குகிறேன் தாயே!

கருவிலே உயிர் கொடுத்தவர் என்னைப் பெற்ற தாய், பொது வாழ்விலே உயிர் கொடுத்தவர் இதய தெய்வம் எங்கள் புரட்சித் தலைவி என்னும் தூய தாய், உங்களை வணங்குகிறேன் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

"யார் தருவார் இந்த அரியாசனம்?"; எங்கள் அன்னை எனக்குத் தந்தார்! (மேசையைத் தட்டும் ஒலி) எளியேனுக்கு இந்த அரியாசனம் தந்தார். ஏற்றம் தந்தார்! ஏற்றம் தந்து, என் வாழ்வில் மாற்றம் தந்தார்.

என் அன்னையை வணங்குகிறேன், என் அன்னையை வணங்குகிறேன். என் அன்னையைத் தாள்பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

2. பேரவைத் தலைவருக்குப் பாராட்டுரைகளும் நன்றியுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை தன்னுடைய உயிர்மூச்சாகக் கொண்டு இயங்குகின்ற ஒன்றரைக் கோடி தொண்டர்களில் ஒருவனான என்னை பாரம்பரியம் மிக்க இந்த அவையில் பங்கேற்கும்படி, சட்டமன்ற உறுப்பினராக்கி, நிதி அமைச்சராக்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை